**உடபலாத்த பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உடபலாத்த பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 4,582,690 தொகையான கைத்தொழில் கடன்பட்டோரின் பெறுமதி பட்டோலைகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 4,728,602 தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 145,912 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

பெறவேண்டிய கணக்குகளின் 02 மீதிகளின் பெறுமதி ரூபா 9,451,475 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 4,868,758 காணப்பட்டது.

#### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய கணக்குகளின் 03 மீதிகளின் பெறுமதி ரூபா 14,397,190 தொகையானதுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 8,432,423 காணப்பட்டது.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

உரிமையை உறுதிப்படுத்தக் கூடிய உறுதிகள்/ உரித்துக் கட்டளை மற்றும் வரைபடங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ரூபா 115,930,000 பெறுமதியான காணியும் கட்டிடங்களும் கணக்காய்வின் போது திருப்திரகமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை** | | |
| (i) | விதி 193 | பாதீடிடப்பட்ட நிதி ஏற்பாடு, குறைநிரப்புடன் ஒப்பிடப்பட்டு ஒவ்வொரு வரவு / செலவு விடயத்தின் மிகை/ குறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெளிவாக்கக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 218 | சபையின் காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரீட்சிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,594,136 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,194,657 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 13,399,479 இற்கான அதிகரிப்பு ஒன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

அவ் அதிகரிப்பிற்காக 04 மூலங்களில் இருந்து வருமான அதிகரிப்பும் ஒரு விடயத்தின் செலவினக் குறைவும் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 உள்ளவாறான நிலுவை | ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் | மிகைக் கட்டணம் | வழங்கப்பட்ட கழிவும் தீர்ப்பனவுகளும் | சேகரிக்கப்பட்ட வருமானம் | | அறவிடப்பட வேண்டிய மொத்த அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2015.01.01 இல் உள்ளவாறான நிலுவையில் சேகரிக்கப்பட்ட வருமானம் | 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 1,907,049 | 1,266,687 | 96,633 | 88,640 | 364,571 | 565,398 | 2,251,759 |
| வாடகை | 609,255 | 1,757,916 | 45,757 | 21,706 | 100,860 | 1,607,937 | 682,425 |
| நீர் | 2,011,055 | 374,430 | -- | 9,025 | 168,087 | 79,805 | 2,128,568 |
| **மொத்தம்** | | | | | | | 5,062,752 |

மூன்று வருமான விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய நிலுவை மீதி ரூபா 5,062,752 ஆகக் காணப்பட்டது.

### 2.3.2 வீதவரி

(அ) சபையின் ஆதனங்களை 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீடு செய்து வீத வரி திருத்தப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வீத வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 சனவரி 01 ஆம் திகதிக்கான நிலுவை வீதவரி மீதி ரூபா 1,913,801 தொகையானதுடன் இதில் ஆண்டின் போது 19 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது பட்டியலிடப்பட்டவற்றில் அறவீடுகள் 45 சதவீதமாகக் காணப்பட்டன.

(இ) நிலுவை மீதியில் 1- 22 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக வீதவரிக் கொடுப்பனவை மேற்கொள்ளத் தவறியவர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,742,587 ஆகக் காணப்பட்டதுடன் இத் தொகையை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பாதீடு பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீர்க் கட்டணம்

2015 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட நீர்க் கட்டண மீதி ரூபா 2,011,055 ஆகக் காணப்பட்டதுடன், இதில் 01 வருடத்திற்குள்ளான அறவீட்டு சதவீதம் 8 ஆகக் காணப்பட்டது. ஆண்டிற்காகப் பட்டியலிடப்பட்டவற்றில் அறவீடு 21 சதவீதமாகக் காணப்பட்டது.

### 2.3.4 கடை வாடகை

(i) தொலுவ வாராந்த சந்தையிலும் பொது சந்தையில் 15 கடைகள் உடன்படிக்கை இன்றி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ii) தொலுவ பொது சந்தையில் ஓர் கடையும் வாராந்த சந்தையில் மேல் மாடியில் 06 கடைகளும் வாடகைக்கு வழங்கப்படுவதற்காக கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் கொள்வனவாளர்கள் முன்வராததன் காரணமாக மூடிவைக்கப்பட்டிருந்தன. வாடகை நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டு அவை மீள வாடகைக்கிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,726,603தொகையாகவும் முத்திரைக் கட்டணம் ரூபா 21,854,981 தொகையாகவும் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) சபையால் மக்கள் வங்கியால் பேணப்படும் ஆம் இலக்க 018100154963797 நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டு முழுதும் பொருண்மையான அளவு காசு மீதி நிலவியதுடன் இத் தொகை நிலையான வைப்பில் முதலீடு செய்யப்படுவதன் மூலம் சபைக்கு வருமானம் பெறப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கு உரித்தான பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரைக்கு அமைவாக ஏலவிற்பனை செய்யப்பட வேண்டிய டொஷிபா வகையிலான போட்டோ பிரதி இயந்திரங்கள் இரண்டும் கையுளவு இயந்திரம் ஒன்றும் ஏலவிற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 1993 ஏப்ரல் 22 ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஓர் உத்தியோகத்தருக்கும் 2008 நவம்பர் 23 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவருக்கும் வழங்கப்பட்டிருந்த சபைக்குரித்தான உத்தியோகபூர்வ விடுதி 2015 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உத்தியோகபூர்வ விடுதியில் குடியிருந்த காரணத்தால் இவ் உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்தும் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவின் படி 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 145,967 தொகையான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. மேற்குறித்த உத்தியோகத்தர்கள் இருவர்

அடங்கலாக 07 பேர் அரசாங்க விடுதிகளில் 06 முதல் 49 ஆண்டு காலமாகக் குடியிருந்தமை கண்டறியப்பட்டது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### (அ) இணக்கச் சான்றிதழ் வழங்குதல்

2012 முதல் 2014 திசெம்பர் வரை அங்கீகரிக்கப்பட்ட 444 கட்டிட விண்ணப்பங்களில் 18 கட்டிடங்களுக்கு மாத்திரமே இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

#### (ஆ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

03 ஆண்டு காலம் கடந்த 15 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் 2016 யூன் 22 ஆம் திகதி வரையிலும் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2015 பெப்ரவரி 11 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, அரசாங்க நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணங்களில் ஈடுபடுவது இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் உரிய நிறுவகத்தின் நிதி பிரதேச மக்களுக்கு நலன்திட்டங்களுக்காகப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருக்கையில் முறையற்ற விதத்தில் சபையின் 29 அமைச்சர்கள் 2015 மே 08 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை சீனாவில் இடம்பெற்ற கழிவு முகாமைத்துவ மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஒருவரிடம் இருந்து ரூபா 160,000 தொகைப்படி ரூபா 2,720,000 தொகை 2015 மே 08 ஆம் திகதி சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இத் தொகை செலவினத் தலைப்பில் இருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் உள்ளபடியாக வெளிநாட்டிற்குச் சென்றமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இப் பயணத்திற்கு அடுத்து வந்த சில நாட்களில், அதாவது 2015 மே 15 ஆம் திகதி சபையின் பதவிக் காலம் முடிவுற்றிருந்ததுடன் அச் செலவில் சபைக்கு எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 55 சதவீதம் வரையும், 07 செலவு விடயங்களில் நூற்றிற்கு 13 முதல் நூற்றிற்கு 76 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்